**<u>சுருக்கம்</u>**

சென்னை மாநகராட்சி - கடற்கரைகள் அழகுபடுத்தும் திட்டம் – மெரினா காமராசர் சாலை மற்றும் எலியட்ஸ் கடற்கரை அழகுபடுத்தும் திட்டம் – திட்டப் பணிகளுக்கான மொத்த மதிப்பீடு ரூ.20.65 கோடிக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு வழங்கல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந,1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.30 <u>நாள்</u> 27.02.2008

சர்வஜித், மாசி –15
திருவள்ளுவர்ஆண்டு–2039

படிக்கவும்:-

1. அரசாணை(நிலை) எண்.7 பொதுப்பணித்துறை நாள் 12.1.2007.
2. பொதுப்பணித்துறை சிறப்பு செயலரின் நேர்முக கடித எண்.21961/ஒய்1/2006–3, நாள்.24.11.2006.
3. அரசாணை (நிலை) எண்.137, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந,1) துறை, நாள் 10.10.07.
4. அரசாணை (நிலை) எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந,1) துறை, நாள் 10.10.07.
5. சென்னை மாநகராட்சி, ஆணையரது கடித எண்.பே.சா.துறை ந.க. எண்.பி3/2079/2007, நாள் 13.09.2007, 10.10.07, 17.10.07, 1.11.07 மற்றும் 2.11.07.
6. அரசாணை (நிலை) எண்.190 சுற்றுலா (ம) பண்பாடு துறை நாள் 30.11.2007.

**<u>ஆணை:</u>**

சென்னை மாநகராட்சி ஆணையர் தனது கடிதத்தில், 24.11.2006 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் சென்னை மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம் பற்றி நடைபெற்ற கூட்டத்தில் இத்திட்டத்தை செயலாக்க தேவையான மதிப்பீட்டு தொகையில் 75% விழுக்காடு அரசிடமிருந்து நிதியை பெறவும் மீதமுள்ள 25% விழுக்காடு சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டு மேலே வரிசை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டது. இவ்வாணையின்படி தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) அவர்களால் திரு. இ.ராஜேந்திரன் & அசோசியேட்ஸ், திட்ட வடிவமைப்பிற்காக நியமனம் செய்யப்பட்டார்கள் எனவும். இதன்படி மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம் மூன்று பிரிவுகளாக

பணிகள் மேற்கொள்ள நிர்வாக வசதிக்காக கீழ்வருமாறு பிரிக்கப்பட்டது என்றும் கூறியுள்ளார்.

(i) இராஜாஜி சாலை (ரிசர்வ் வங்கி முதல் போர் நினைவு சின்னம் வரை)
(ii) காமராஜர் சாலை (நேப்பியர் பாலம் முதல் கலங்கரை விளக்கம் வரை)
(iii) எலியட்ஸ் கடற்கரை (பெசன்ட் நகர்)

2. மேலே வரிசை எண் மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இனம் (1) இராஜாஜி சாலையை அழகுபடுத்தும் பணிக்காக ரூ.440/– லட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இனம் (ii) காமராஜர் சாலையில், சுமார் மூன்று கிலோ மீட்டர் நீளத்திற்கு மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்ட மதிப்பீடு ரூ.16,92,79,000/-க்கு (2006-2007 திருத்திய விலைவிவரப்பட்டியலின்படியும்), இனம் (iii) எலியட்ஸ் கடற்கரையில் (பெசன்ட் நகர்) சுமார் 800 மீட்டர் நீளத்திற்கு அழகுபடுத்தும் திட்ட மதிப்பீடு ரூ.2,93,00,000/-க்கு 2007-2008 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

3. இத்திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது:

i. பொது மக்கள் அமர்ந்து கடலின் அழகை ரசிக்க அமர்வு மேடைகளும் அதனைச் சார்ந்த நடைவழிப் பாதைகளும்
ii. பெர்கோலா (Pergola) அமைத்தல் மற்றும் அதனைச் சார்ந்த பணிகளும்
iii. இரண்டு எண்ணிக்கையில் பளிங்கு கற்களுடன் நவீன கழிப்பிட வசதி
iv. காலையில் நடைபழகும் பொது மக்களுக்கான நவீன அலங்கார நடைபாதை அமைக்கவும்
v. வாகனங்களை நிறுத்த அதற்குண்டான நிறுத்துமிடங்களும்
vi. அழகிய புற்தரைகளுடன் பலதரப்பட்ட பூச்செடிகள், மற்றும் அலங்கார குறுமரங்கள் அமைத்து பசுமையாக்கும் பணிகளும்
vii. நவீன நீரூற்று மற்றும் அதனைச் சார்ந்த பணிகளும் / செய்ய இத்திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4. ஒப்பம் இறுதிசெய்தபின் காமராஜர் சாலை அழகுபடுத்தும் பணியின் மொத்த மதிப்பீடு பின்வருமாறு உள்ளது:

| | |
|---|---|
| ஒப்பத் தொகை | ரூ.17,17,62,131.00 |
| மதிப்பீட்டின் மேலான மேற்பார்வை செலவினம் 10% | ரூ.1,39,90,004.90 |
| மதிப்பீட்டின் சிறுமேற்பார்வை செலவினம் 2.5% | ரூ. 34,97,501.23 |
| மதிப்பீட்டின் கலந்தறிதற்கரியர் செலவினம் 5% | ரூ. 69,95,002.45 |
| மதிப்பீட்டின் எதிர்பாரா செலவினம் 2.5% | ரூ. 34,97,441.93 |
| மதிப்பீட்டின் தரக்கட்டுப்பாடு செலவினம் 1% | ரூ. 13,99,000.49 |
| | ரூ.20,11,41,082.00 |

---------------------

எலியட்ஸ் கடற்கரை (பெசன்ட் நகர்) அழகுபடுத்தும் பணியின் மொத்த மதிப்பீடு கீழ்வருமாறு :

| | |
|---|---|
| பணித்தொகை | ரூ. 2,42,25,000.00 |
| மதிப்பீட்டின் மேலான மேற்பார்வை செலவினம் 10% | ரூ. 24,22,500.00 |
| மதிப்பீட்டின் சிறுமேற்பார்வை செலவினம் 2.5% | ரூ. 6,05,625.00 |
| மதிப்பீட்டின் கலந்தறிதற்கரியர் செலவினம் 5% | ரூ. 12,11,250.00 |
| மதிப்பீட்டின் எதிர்பார செலவினம் 2.5% | ரூ. 5,93,375.00 |
| மதிப்பீட்டின் தரக்கட்டுப்பாடு செலவினம் 1% | ரூ. 2,42,250.00 |
| | ரூ. 2,93,00,000.00 |
| மொத்த மதிப்பீடு | **ரூ. 23,04,41,082/-** |

5. இந்த மதிப்பீட்டின் மொத்த தொகையான ரூ.23,04,41,082/-ல் அரசின் பங்கான 75% விழுக்காடு பெறவும், மீதமுள்ள 25% விழுக்காடு பங்குத் தொகையை சென்னை மாநகராட்சி 2007-2008ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் மூலதன நிதியிலிருந்து செயலாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருதி இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக அனுமதியை எதிர் நோக்கி ஒப்பங்கள் கோர மன்றத்தின்அனுமதி தீர்மான எண்.329/2007, நாள் 30.7.07 மற்றும் தீர்மான எண்.513/2007 நாள் 29.10.2007 மூலம் பெறப்பட்டது என்றும் தெரிவித்துள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் கீழ்கண்ட இனங்களுக்கு அரசின் ஆணையினைக் கோரியுள்ளார்:

1. சென்னை மெரினா கடற்கரை காமராஜர் சாலை அழகுபடுத்தும் திட்ட மதிப்பீடு ரூ.20,11,41,082/-க்கு அரசின் நிர்வாக ஒப்புதல்.
2. சென்னை எலியட்ஸ் கடற்கரை அழகுபடுத்தும் திட்ட மதிப்பீடு ரூ.2.93 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல்.
3. இத்திட்டத்தை செயலாக்க தேவையான நிதியில் அரசின் பங்கான 75 விழுக்காட்டை ஒப்பங்கள் இறுதி செய்த பின்னர் அதற்கேற்ப ஒதுக்கீடு செய்யவும்.
4. மீதமுள்ள 25 விழுக்காட்டை சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டியும்.
5. இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருதி இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரியதற்கு பின்னேற்பு அனுமதியும்.

6) சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவை நன்கு ஆராய்ந்தபின்அரசு மேற்படி திட்ட மதிப்பீடுகளிலிருந்து உயர்நிலை கண்காணிப்பு கட்டணம் 10 விழுக்காடு மற்றும் சிற்றின கண்காணிப்புக் கட்டணம் 5 விழுக்காடு ஆகியவற்றை நீக்கி பின்வருமாறு ஆணையிடுகிறது:

1. சென்னை மெரின கடற்சரை காமராஜர் சாலை அழகுபடுத்தும் திட்ட மதிப்பீடு ரூ.18.02 கோடிக்கு அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

2. சென்னை எலியட்ஸ் கடற்கரை அழகுபடுத்தும் திட்ட மதிப்பீடு ரூ.2.63 கோடிக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

3. இத்திட்டத்தை செயலாக்க தேவையான நிதியில் மைய அரசு அளிக்கவுள்ள ரூபாய் 5 கோடி மானியத்தைக் கழித்த பின்னர் மீதித் தொகையில் அரசின் பங்கான 75 விழுக்காட்டை ஒப்பங்கள் இறுதி செய்த பின்னர் அதற்கேற்ப ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்படுகிறது.
4. மீதமுள்ள 25 விழுக்காட்டை சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.
5. இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருதி இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரியதற்கு பின்னேற்பு அனுமதி வழங்கப்படுகிறது.

7) இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அ.சா.கு.எண்.89/நிசெ/ப்பி/08 நாள் 30.1.2008 ன் மூலம் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை -600 003.
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை , சென்னை – 600 108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை-600 018/35.
நகல்:
முதல் அமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சரின் சிறப்பு நிலை
நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
நிதித் துறை அமைச்சரின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(அ,ந –2) துறை, சென்னை-600 009
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.